செய்தி வெளியீடு எண். 110 நாள் 20.02.2017

**திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கத்தில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் ரூ. 61000 மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

~~~~~

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (20.02.2017) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பொது மக்களின் கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் பெற்றுக் கொண்டார். மேலும் இக்கூட்டத்திற்கு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகை புரிந்த பொதுமக்கள் தங்களது தனிப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்யவும், உதவிகள் வழங்கிடவும் கோரி மனுக்களை அளித்தனர். இதில் நிலம் சம்பந்தமாக 48 மனுக்களும், சமூக பாதுகாப்பு திட்டம் 88 மனுக்களும், சமூக நலத்திட்டம் 2 மனுக்களும், குடும்ப அட்டை 27 மனுக்களும், ஆதிதிராவிடர் / பிற்படுத்தப்பட்டோர் நலம் 03 மனுவும், வேலைவாய்ப்பு 35 மனுக்களும், கல்வி 02 மனுக்களும், சட்டம் மற்றும் ஒழுங்கு 07 மனுக்களும், ஊரக / நகர்புற வளர்ச்சி 20 மனுக்களும், கடனுதவி 5 மனுக்களும், அடிப்படை தேவை / போக்குவரத்து / சுகாதாரம் 03 மனுக்களும், வேளாண்மை / கால்நடைத்துறை / மீன்வளம் 03 மனுக்களும், இதரதுறை 56 மனுக்களும், பேரிடர்கள் 19 மனுக்களும், சான்றிதழ் 5 மனுவும் என மொத்தம் 323 மனுக்கள் பெறப்பட்டது.

இம்மனுக்கள் மீது துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ளவும், பயனாளிகளுக்கு உதவிடும் வகையில் விரைந்து பரிசீலிக்க வேண்டும் என துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம் மூலம் 10 வகுப்பு மாவட்ட அளவில் அதிக மதிப்பெண் தேர்ச்சி பெற்ற 43 மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ் மற்றும் பரிசு உதவித்தொகை ரூ.61000, புதுவாழ்வுத்திட்டத்தின் கீழ் 8 பயனாளிகளுக்கு சர்க்கர நாற்காலியும், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத்திட்டத்தின் கீழ் திருத்தணி ஒன்றியம் அரசு மேல்நிலைப்பள்ளி, மத்தூரில் கருணை அடிப்படையில் சத்துணவு அமைப்பாளராக 1 நபருக்கு பணி நியமனம் வழங்கப்பட்டது, மாவட்ட வழங்கல் அலுவலர் மூலம் 10 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கே.முத்து, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திருமதி.ட்டி.ஆர்.மல்லிகா, மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~